★ பக்கங்கள் 6 விலை சதம் 40

செல்வச்சந்நிதியில்
அமைந்திருக்கும்
அண்ணா கோப்பி
விளம்பர நிலையத்தில் எமது
உற்பத்திப் பொருட்களை
வாங்கி இனம் பொருட்களைப்
பெற்றுக்கொள்வதோடு
சுவைமிக்க அண்ணா கோப்பி
யையும் அருந்துங்கள்.

# ஈழநாடு

# The EELANADU

Registered as a Newspaper at the General Post Office
Sri Lanka Under No QB/8945/78
மலர் 21 ஆவணி 20 ஷவ்வா 12 இதழ் 205
யாழ்ப்பாணம் புதன்கிழமை 5-9-79

தரத்தில் நிகரற்ற
மான், முயல், விளக்கு,
வரிக்குதிரை,
செவன மார்க்
ஓடுகளுக்கு
மு. தா. பொன்னம்பலம்,
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED
1979 -9- 07
PERIODICALS DIVISION

# என்.எம்.மின் அரசியல்நேர்மை:

# பிரதமர் பாராட்டு

## கூட்டணி எம்.பி.க்கள் பாராளுமன்றம் சமுகம்

(எஸ். மகாலிங்கசிவம்)
(கொழும்பு)

**நேற்றுப் பிற்பகல் பாராளுமன்றம் கூடியபோது மறைந்த தொழிற்சங்கத் தலைவர் கலாநிதி என்.எம். பெரேராவுக்குப் பிரதமர், கட்சித்தலைவர்கள் புகழ் அஞ்சலி செலுத்தினர்.**

பிரதமர் திரு ஆர் பிரேம தாசா உரையாற்றுகையில், மறைந்த கலாநிதி என். எம் பெரேரா என்றும், நாட்டின் காலஞ்சென்ற தொழிற்சங்கத் தலைவர் கலாநிதி என் எம் பெரேராவுக்கும் தமக்கும் அரசியல் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் நம்பிக்கை வைத்த லட்சியத்துக்காக அரசியல் நேர்மையுடன் அயராது உழைத்தவர் கலாநிதி என் எம் பெரேரா என்றும் தமது வாழ்நாள் முழுவதும் அவர் கடைபிடித்த அந்த அரசியல் நேர்மையை நாம் பாராட்டாமல் இருக்க முடியாதுள்ளதென்றும் கூறினர்

நேற்றைய பாராளுமன்றக் கூட்டத்துக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி எம் பிக்கள் அனைவரும் சமுகமளித்திருந்தனர் கலாநிதி என் எம்மின் அனுதாபப் பிரேரணை மீது எதிர்க்கட்சித் தலைவர் திரு அ அமிர்தலிங்கம் உரையாற்றுகையில், இந்த நாட்டில் சோஷலிசத்தை வித்திட்டவர் தொழிற்சங்க அமைப்புக்கு அவர் ஆற்றியுள்ள சேவை அளப்பரியது என்றும் கூறினர்

அனுதாபப் பிரேரணை மீது மதவாச்சி எம் பி திரு மைத்திரிபால சேனநாயக்கா அமைச்சர் எஸ். தொண்டமான், அமைச்சர் வின்சன்ட் பெரேரா ஆகியோரும் உரையாற்றினர்



ஹட்டன் நஷனல் வங்கி பொது முகாமையாளர் திரு எம். தர்மராஜா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது யாழ். ஹட்டன் நஷனல் வங்கி முகாமையாளர் திரு. எஸ். கோபாலகிருஷ்ணன் தம்பதிகள் சுபாஸ்விடுதியில் அளித்த வரவேற்பின்போது எடுத்த படம். படத்தில் (இடமிருந்து வலமாக) சிகரெட்கம்பனி முகாமையாளர் திரு. பி நமசிவாயம், பிரபல வர்த்தகர் திரு என் சின்னத்துரை ஜே. பி, யாழ் ஹட்டன் நஷனல் வங்கி முகாமையாளர் திரு. யோகாோபாலகிருஷ்ணன், சாவகச்சேரி நீதவான் திரு பாலகிருஷ்ணன், யாழ் மாவட்ட நீதிபதி திரு. எம். ஆசிர்வாதம், ஹட்டன் நஷனல் வங்கி முகாமையாளர் திரு எம் தர்மராஜா, சமூக சேவை உதவி ஆணையாளர் திரு கே செல்லத்துரை, பதில் நீதவான் திரு கே கனகரத்தினம் ஆகியோர் காணப்படுகின்றனர்

## யாழ்.மாவட்டத்தில் முந்திரிகைச் செய்கை அபிவிருத்தி குறித்து ஆலோசனை

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில், முந்திரிகைச் செய்கையை விருத்திசெய்வது சம்பந்தமான ஒரு ஆலோசனைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை இங்கு நடைபெற்றது.

இந்த ஆலோசனைக்கூட்டத்தில் யாழ். முந்திரிகைச் செய்கையாளர் பிரதிநிதி திரு வை சி. சி கு. பிரமானந்தாவும், முன்னாள் இலங்கை வங்கி பிரதான நிர்வாகியும், உலகவங்கி ஆலோசகருமான திரு செ. லோகநாதனும் கலந்துகொண்டனர்.

யாழ். முந்திரிகைச் செய்கை

(6-ம் பக்கம் பார்க்க)

## மத்தியகிழக்கு விவகாரம் காரசாரமான விவாதம்

ஹவானா, செப், 4

எகிப்தியர்கள் உட்படசகல அரபுமக்களுக்கும் காம்ப்டேவிட் ஒப்பந்தம் துரோகம் இழைக்கும் வகையில் அமைந்துள்ள தென்று கியூபாத் தலைவர் டாக்டர் பிடல் காஸ்ட்ரோ அணிசேரா மகாநாட்டில் தமது தலைமையுரையில் கூறினர்

இக்கூட்டத்தில் குறுக்கிட்ட எகிப்தியப்பிரதிநிதி டாக்டர் புட்ரோஸ்காலி. இக்கூற்று குறித்து பதிலளிக்கத் தமக்குச் சந்தர்ப்பமளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

தமது கூற்றுக்குப் பதிலளிக்கும் உரிமை எகிப்தியபிரதிநிதிக்கு உண்டெனக் கூறிய டாக்டர் காஸ்ட்ரோ அவரை பேச அனுமதித்ததையடுத்து டாக்டர் காலி பேசினர்.

டாக்டர் காஸ்ட்ரோவின் கூற்று தமக்கு அதிர்ச்சியையும் மனக்குழப்பத்தையும் அளித்துள்ளதாக ஜனாப் காலி கூறினர்.

இக்கூட்டத்தில் லிபிய பிரதி

(6-ம் பக்கம் பார்க்க)

யாழ். ஆஸ்பத்திரியில்

## மீண்டும் பால் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் கடந்த சிலவருடங்களாக தடைப்பட்டிருந்த பால் விநியோகம் இம்மாதம் முதல் மீண்டும் வழங்கப்படுகிறது.

இத்தகவலை ஆஸ்பத்திரி கமிட்டித் தலைவர் திரு ஏ ஏ ஜோசப் நேற்றுத் தெரிவித்தார்.

இறைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமானை ஆஸ்பத்திரி கமிட்டியினர் இவ்விஷயமாக தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து அமைச்சர் தொண்டமான் யாழ். ஆஸ்பத்திரி நோயாளிகளுக்கு பால் வழங்க உடன் நடவடிக்கை எடுத்தார்,

யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்படும் நோயாளிகளுக்கும் பால் வழங்கப்படும் என திரு ஏ ஏ. ஜோசப் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்கி தேவையான மருந்துகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஃ)

## இந்தியா 389 -- 3

### சபாஷ் கவாஸ்கர்!

[லண்டன்]

லண்டன் ஓவல் மைதானத்தில் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே நடைபெறும் நான்காவது கிரிக்கெட் டெஸ்டின் இறுதிநாளான நேற்று [இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை கிடைக்கப்பெற்ற ஓட்டங்களின்படி] இந்தியா மிகவும் அற்புதமாக விளையாடி ஒரு விக்கட் இழப்புக்கு மொத்தம் 389 ஓட்டங்கள் எடுத்திருந்தது!

பாரதவீரர் சுனில்கவாஸ்கர் மொத்தம் 187 ஓட்டங்களை எடுத்து சாதனைபுரிந்து கொண்டிருந்தார். சவான் எண்பது ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார், இவரைத் தொடர்ந்து வெங்கசாஸ்கர் 00 ஓட்டங்களுடன் விளையாடிக்கொண்டிருக்கிறர்.

1979/80 வருட சமூகசேவை நிதிக்காக
யாழ். லயன்ஸ் கழகம் அளிக்கும்
''வரணியூரான்'' குழுவினரின்

சண்டியன் சின்னத்தம்பி

(சமூக, நகைச்சுவை நாடகம்)
(தயாரிப்பு-யாழ் கலைவட்டம்)
சனிக்கிழமை 8-9-79 மாலை 6-30 மணிக்கு
யாழ். வீரசிங்கம் மண்டபம்
பிரதம அதிதி: யாழ். நகரமுதல்வர்
திரு. இராசா விஸ்வநாதன்
3497

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வெலொசோலெக்ஸ் 8 ஸ்ரீ தொடர். நல்ல நிலையில். விலை 3700/-க்குமேல். முந்துவோருக்கு 500/- பெறுமதியான ஏது உதிரிப்பாகங்கள் வழங்கப்படும். நாவேந்தன், ஏழாலை-வடக்கு, ஏழாலை. 3483

### தேவை

பீடி சுற்றுவதில் அனுபவம் உள்ள பெண்கள் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும். தர். கனகலிங்கம். (D.K) 8 "A" முஸ்லீம் கல்லூரி வீதி, கொட்டடி (கடைனுக்கு அண்மையில்) யாழ்ப்பாணம். 3489

விஜயதசமி, வித்தியாரம்பம் செய்வோருக்கு ஏடு அர்ச்சித்துக் கொடுக்க டனே ஒரு சரிபு தொகையாகத் தேவை. தொடர்பு கொள்ளுங்கள். மிக்கவதி, யாழ்ப்பாணம். 3496

### FOR SALE

For immediate sale owners going abroad Corningware Dinner Set Connon Camera Battery clock, Baby cot Jeganathan, 27, Shwarty Lane, Chundikuli. 3493

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

### கேள்விப் பத்திரம்

எமது சங்கத்தால் மேற்கொள்ளப்படவிருக்கும் கட்டிட வேலைகளுக்குரிய இரும்புச் சுருக்குகளைவும் சொந்த வழங்குவதற்கும், கூரைவேலைக்குரிய மரவகைகள் வழங்குவதற்கும், சல்லிக்கல்லு, மணல் ஆகியன வழங்குவதற்கும் உரியவர்களிடம் இருந்து கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உரிய விபரங்களைச் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 2/- விண்ணப்பப்படிவத்திற்கும், ரூபா 500/- வைப்புப் பணமாகவும் செலுத்தி 12 9-79க்குமுன் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பங்களாவும் சங்கத் தலைமைக் காரியாலயத்திற்கு 22-9-79க்குமுன் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்

பொ. சோமாஸ்கந்தர்
பொதுமுகாமையாளர்
நல்லூர் ப நோ கூ சங்கம்
திருநெல்வேலி.
3495

### ஏலவிற்பனை

யாழ். மாநகரசபை

யாழ்ப்பாணம் நல்லூர் கலியாண மண்டப வளவில் வைத்து 20,800 தென்னம் இடுகுகளும், 5000 முளை பனஞ் சிலாகைகளும் எதிர்வரும் 7-9-79ம் திகதி வெள்ளிக்கிழமை மு ப 10-00 மணியளவில் பகிரங்கஏலத்தில் விற்கப்படும். இத்திபெற்ற ஏலதாரர் உடனடியாகப்பணத்தைச் செலுத்திப் பொருட்களை அப்புறப்படுத்தல்வேண்டும்.

க. சிவஞானம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
4-9-79 3501

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


யாழ். ஆஸ்பத்திரி மரணங்கள்;

# ஆஸ்பத்திரிஊழியர்களுக்கு எவ்வித தொடர்புமில்லை

## 'எம். எஸ்.' அறிக்கையை கமிட்டி ஏற்றது

(யாழ்ப்பாண )

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் நிகழ்ந்த மூன்று மரணங்களுக்கும், ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என வைத்திய அத்தியட்சகர் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது.

யாழ் ஆஸ்பத்திரிக் கமிட்டித் தலைவர் திரு. ஏ ஏ. ஜோசப் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

யாழ் ஆஸ்பத்திரியில் 3 நோயாளிகள் கட்டிலால் வீழ்ந்து மரணமானதாகக் கூறப்பட்ட புகாரைத் தொடர்ந்து இதுபற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆஸ்பத்திரிக் கமிட்டி வைத்திய அத்தியட்சகரைக் கோரியிருந்தது.

வைத்திய அத்தியட்சக விசாரணை நடத்தி ஆஸ்பத்திரிக் கமிட்டிக்கு அறிக்கை சமர்ப்பித்தார்.

அந்த அறிக்கையில் இந்த மரணங்களுக்கும், ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கும் தொடர்பில்லையென்று கூறப்பட்டுள்ளதாகவும் அதனை ஆஸ்பத்திரிக் கமிட்டி அங்கீகரித்துள்ளதாகவும் கமிட்டித் தலைவர் திரு ஏ. ஏ. ஜோசப் தெரிவித்தார்.

மரணமான ஒரு நோயாளியுடன் அவருக்கு உதவியாக வார்ட்டில் உறவினர் ஒருவர் இருந்தாரென்பது தெரியவந்துள்ளதாகவும், மரணமான மற்றொரு வயோதிபப் பெண் கட்டிலிலிருந்து இறங்கிப் பக்கத்திலிருந்த பெட்டிக்குள் சாமான்களை எடுக்கும்போது மரணமானது தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மூன்று மரணங்களுக்கும் ஆஸ்பத்திரி ஊழியர்கள் பாத்திரவாளிகளல்ல என்றும் அவர் கூறினார். [ஈ]


தொல்வினைதீர்க்கும் செல்வ சன்னதி வேலவா
நின் அருள் எல்லோருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்

அழகுசாதனப் பொருட்கள்,
சப்பாத்துவகைகள், நூல்வகைகள்
ஆகியவற்றிற்கு விஜயம் செய்யுங்கள்

நா த ன் ஸ்

நவீனசந்தை யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7540 3499

விற்பனையாகின்றன
தமிழ்மொழி
அடிப்படை அறிவும் பயிற்சிகளும்
ஐந்தாம் வகுப்பு விலை ரூபா: 5-50.
ஆறாம் வகுப்பு விலை ரூபா: 6-00
நவோதய புலமைப் பரிசில் பரீட்சைக்கும் வகுப்பேற்றப் பரீட்சைக்குமான பயிற்சிகளை உள்ளடக்கிய துணை நூல்கள்.


வெளியீடு:
ஞானசுரபி புத்தகக் கம்பனி
217, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்
3494

அரசாங்க அனுமதிப்பத்திரத்திற்கு
50 வீத சகாய விலையில்
நீங்கள் நீண்டநாள் எதிர்பார்த்த
மண்ணெண்ணெ மேர்குறி
அவுட்போட் மோட்டர்கள்
20 HP 7.5 HP அளவுகளில்
சகல உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு.

இப்ராஹிம் ஜெபர்ஜி

218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 409.
148, ஆமர்வீதி, கொழும்பு. 23857, 28864.
[3431]

எல்லாம் வல்ல
செல்வ சன்னதி முருகன்
அருளால் எல்லோரும்
இன்புற்றிருக்க
பிரார்த்திக்கிறோம்
தரத்திற் சிறந்த
மான், விளக்கு,
செவன, முயல்,
வரிக்குதிரை
மார்க்
ஓடுகளுக்கு



மு. தா. பொன்னம்பலம்,
36, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7493. 3500


## 5 நோயாளிக்கு ஒரு நர்ஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்கு நர்சுகளை அதிகரிக்குமாறு வைத்திய சேவை அத்தியட்சகரை யாழ். ஆஸ்பத்திரி கேட்டுள்ளதாக யாழ் ஆஸ்பத்திரி கமிட்டித்தலைவர் திரு. ஏ. ஏ. ஜோசப் தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் 5 நோயாளிக்கு ஒரு நர்சு வீதம் நியமிக்குமாறும் கோரியிருப்பதாக அவர் தெரிவித்தார். ஆஸ்பத்திரியில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்கி தேவையான மருந்தை வழங்குமாறு கேட்டிருப்பதாகவும் கூறினர். [ஈ]

## 9 பிள்ளைகளின் தந்தை

### தற்கொலை

[மட்டுவில்]

மதுவெறியில் இந்த ஒன்பது பிள்ளைகளின் தந்தை, மனைவியிடம் குடிக்கப் பணம் கேட்டார். மனைவி பணம் தர மறுத்ததும் கிருமிநாசினி அருந்தி உயிரை மாய்த்துக் கொண்டார்.

இச்சம்பவம் மட்டுவில் தெற்கில் நேற்று நடைபெற்றது.

சாவகச்சேரியைச் சேர்ந்த மரணவிசாரணை அதிகாரி திரு என் தர்மேந்திரன் விசாரணை நடத்தினார். இறந்தவரான குமாரசாமியின் மனைவியான பாக்கியம் (வயது 39) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"இறந்தவர் சரவணமுத்து குமாரசாமி (வயது 45) எனது கணவர். இவர் மாதங்கை என்னுமிடத்தில் கருட் தொழில் நடத்திவந்தார். இவர் மூலம் எனக்கு ஒன்பது பிள்ளைகள் உள்ளனர். இவர் அண்மையில் மாதங்கையில் இருந்து ஊருக்கு வந்தார். வந்து சில நாட்கள் மதுவைத் தொடவேயில்லை. இதனால் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் நேற்று இவர் மதுபோதையில் வந்து சாராயம் குடிக்கப் பணம் தேவையென்று என்னிடம் பணம் கேட்டார். நான் கொடுக்கவில்லை. உடனே அவர் சுமார் கால் மைல் தூரத்திலுள்ள எமது பிளாய்த் தோட்டத்திற்குச் சென்று மயங்கிய நிலையில் கிடக்கக் கண்டோம். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்ல முயலும்போது மரணமானார்" என்று கூறினர்.

இறந்தவரின் தமையன் எஸ். மார்க்கண்டு, மகன் இலங்கநாதன் உட்பட பலர் சாட்சியமளித்தனர். பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. ஜெயநாதன் சாட்சியம் அளித்தார். தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

## கிளிநொச்சி முருகன் ரதோற்சவம் இன்று

யாழ் மாவட்டத்தின் நெற்களஞ்சியமாக கிளிநொச்சிப் பிரதேசம் துலங்குகின்றது. யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் இருந்து பல ஆயிரக்கணக்கான மக்கள் குடியேறி இப்பிரதேசத்தை வளங்கொழிக்கும் பூமியாக மாற்றியுள்ளனர். இரணைமடுக்குளம் இப் பிரதேசத்தின் வளப்பிற்கும் வளர்ச்சிக்கும் வழிவகுக்கின்றது. இப் பிரதேச சைவர்களுக்கு ஒரு வழிபாட்டுத்தலம் இல்லாமை பெருங்குறையாய் இருந்தது.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்பது ஆன்றோர் வாக்கு. இதை ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கு முன் உணர்ந்த இப் பகுதிப் பெரியார்கள் கிளிநொச்சிப் பகுதியிலே குமரனுக்குக் கோவில் கட்டும் பணியில் ஈடுபட்டனர்.

இப் பணியில் முன்னின்று உழைத்தவர் முகாந்திரம் இ. வெற்றிவேலு விதானையார் ஆவார். அவருடைய உறுதியான எண்ணமும், முருக சிந்தனையுமே முருகன் ஆலயம் உருவாகுவதற்குக் காரணமென்று கூறுவது மிகையாகாது. வளமும், வனவிலங்குகளும் நிறைந்த இப் பிரதேசத்தில் எத்தனையோ இடர்களுக்கும், துன்பங்களுக்கும் மத்தியில் இவ்வாலயம் அமைக்கும் பணியில் ஈடுபட்டு கும்பாபிஷேகம் செய்து வைத்த அந்த வள்ளல் பெருந்தகையின் சேவைத் தொண்டை கிளிநொச்சி மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

### பரிபாலனசபை

முகாந்திரம் திரு. இ வெற்றிவேலுவின் மறைவையடுத்து ஆலய வளர்ச்சி சற்றுத் தாமதப்பட்டது. ஆலய வளர்ச்சிக்கு ஒரு பரிபாலனசபை அமைத்து நடாத்தவேண்டுமென்ற எண்ணம் பலருடைய உள்ளத்தில் உருவாகியது. அந்த எண்ணத்தை உருவாக்கும் பணியில் கிளிநொச்சித் திருநெறிக் கழகம் முன்னின்று உழைத்தது.

கழகச் செயலாளராக இருந்த திரு. க. நல்லதம்பியின் விடாமுயற்சியினால் 11-8-64ல் ஆலயப் பரிபாலனசபை உருவாக்கப்பட்டது. அதன் தலைவராக முன்னாள் கிளிநொச்சி எம். பி யும், சைவப்பெரியாருமாகிய உயர்திரு. க. சிவசுந்தரம் தெரிவுசெய்யப்பட்டார். அவருடைய காலத்தில் திருப்பணி வேலைகள் நடைபெற்றன.

### குறை நீங்கிற்று

ஆலய பரிபாலனசபையின் காலத்தில், கிளிநொச்சிப் பகுதியில் கொடியேற்ற உற்சவம் இல்லாத குறை நீக்கப்பட்டது. பரிபாலனசபையின் முயற்சியால் கிளிநொச்சி நீர்ப்பாசன இலாகாவின் பெருநிதியோடு கொடியேற்ற உற்சவம் நடைபெறவேண்டிய

[5ம் பக்கம் பார்க்க]

# இந்திய ஜனாதிபதியின் அதிகாரங்கள் யாவை?

# லோகசபையை அவர் கலைத்தது சரிதானா?

இந்தியா சுதந்திரம் பெற்ற கடந்த 30 ஆண்டு காலத்தில் இந்திய ஜனாதிபதியின் நடவடிக்கைகளைப் பகிரங்கமாக எதிர்த்தவர்களோ, அவர் மேல் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தவர்களோ எவரும் இலர்.

ஆசியாவில் 60 கோடி மக்களின் தன்னிகரற்ற ஆட்சித் தலைவராக அவர் மிகவும் கௌரவமாகக் கணிக்கப்பட்டு வந்துள்ளார். அதி உயர்ந்த மதிப்பு அவருக்கு அளிக்கப்பட்டது. சுதந்திரப் போரில் சிறைசென்று இன்னற்பட்ட தேசத் தியாகச்சுடர்களே அவ்வப்போது ஜனாதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். முதலாவது ஜனாதிபதி இராசேந்திரப்பிரசாத் தொடக்கம் தத்துவமேதை ராதாகிருஷ்ணன், வி. வி. கிரி வரை பாரத மக்களாலும் பாராட்டப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.

1977 தேர்தலின் பின் இந்தியக் காங்கிரஸ் பிளவுபட்ட பின் காங்கிரஸ் உறுப்பினர்கள் பிரிந்து அமைத்த ஜனதா கட்சி தேர்தலில் பெருவெற்றி பெற்று, திரு நீலம் சஞ்சீவ ரெட்டியை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தனர்.

## புத்தொளி

ஆந்திரமண்ணில் எளிய மக்களிடையே புகழ்பெற்று இந்தியா முழுவதிலும் வேரூன்றியவர் ஜனாதிபதி சஞ்சீவரெட்டி. லோகசபையில் சபாநாயகராக இருந்து நீதி செலுத்தியவர். அவரது தாய்மொழி தெலுங்கு. அவர் ஓர் உண்மையான காந்தியவாதி. சமீபத்தில் டெல்லியில் மாணவர் மத்தியில் அவர் பேசியபோது "மொழிவெறி தாய்நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கக் கூடாது. மொழி வெறியையும் ஜாதி வெறியையும் வளரவிட்டுவிட்டால் நம்முடைய நாட்டின் ஒற்றுமை சிதறிப் போய்விடும்" என ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

ஜனதா அரசு இரண்டரை ஆண்டுகளின் பின் ராஜினாமாச் செய்தபோது மதச்சார்பற்ற ஜனதா தோன்றியது. பதவியிலிருந்த பிரதமர் ராஜினாமாச் செய்தபின் எதிர்க்கட்சித் தலைவரை அரசை அமைக்குமாறு அழைத்தார். எதிர்க்கட்சித் தலைவர் திரு. சவானும் அரசை அமைக்க முடியாதுபோகவே ஜனதாவிலிருந்து பிரிந்துசென்ற மதச்சார்பற்ற ஜனதாவின் தலைவர் திரு சௌத்ரிசரண்சிங்கை அரசமைக்க அழைப்பு விடுத்தார். அவராலும் மத்தியில் நிலையான அரசொன்றை அமைக்க முடியாமலிருப்பதை அறிந்த ஜனாதிபதி, மீண்டும் மீண்டும் கட்சிகளை அழைத்து அரசியலைக் குழப்பிக்கொண்டிருக்காது லோகசபையைக் கலைத்து இடைத்தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

### இடைக்காலத் தேர்தலுக்கு உத்தரவு

உதிரிக் கட்சிகள் சேர்ந்து அமைக்கும் அரசாங்கம் நிலையான ஒரு அரசாங்கத்தை 1982 வரை அமைக்கமுடியாதென்பதை சரண்சிங் மூலம் அறிந்த ஜனாதிபதி இடைக்காலத் தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

இப்படியான ஒரு உத்தரவு செல்லுபடியாகாதென உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கலாகியுள்ளது.

### சந்திரசேகர் மீதும் வழக்குத் தாக்கல்

அதேவேளை நாட்டின் கௌரவ தலைவரை, அதி உயர்ந்த பதவியிலிருப்பவரை ஜனநாயகத்தைக் கொலை செய்தவர், அரசியல் குள்ளன் என விமர்சித்த ஜனதா தலைவர் திரு சந்திரசேகர் மேல் ஜனாதிபதியை அவமதித்த குற்றத்திற்காக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

ஆசியாவில் இரண்டாவது பெரிய தேசத்தில்—சுதந்திரச் சிற்பி—காந்திஜி பிறந்த மண்ணில் தியாகிகளும், சுதந்திர வீரர்களும் சுதந்திரத்திற்காக உயிர் நீத்த தேசத்தில், 60 கோடி மக்களைக் கொண்ட ஒரு மாபெரும் நாட்டில், இன்று அதன் ஜனாதிபதி குற்றக்கூண்டு, குறைகாணப்படும் நிலைக்கு ஆளாக்கப்பட்டது அந்நாட்டின் துரதிர்ஷ்டமேயாகும்.

இடைத் தேர்தல் மூலம் மீண்டும் அடிதடியும், அண்டை அயலவர் பகையும், தேர்தல் வசைமாரிகளும், 36 கோடி மக்கள் வாக்களிக்கச் செல்வதும், அதற்காக 150 கோடி ரூபா செலவாகுவதும் ஒரு காந்தியபக்தரான ஜனாதிபதியின் விருப்பத்துக்குரியதாக இருக்க முடியாதென்பது வெளிப்படை. நாட்டின் நலன் கருதியே அவர் இந்த முடிவை எடுத்தாரென்று இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற செல்வாக்குள்ள பத்திரிகை விமர்சித்தது.

இந்த இக்கட்டான வேளைகளில் ஒரு ஜனாதிபதியின் கடமை என்ன? ஒரு ஜனாதிபதியைப் பதவியிலிருந்து நீக்கச் சட்டதிட்டங்கள் இடம் தருமாவென்பது இன்றைய கேள்வியாக இருக்கின்றது.

இதன் காரணமாக இந்திய அரசியல் திட்டத்தில் ஜனாதிபதி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்களைக் கவனிப்போம்.

### நிர்வாக ஸ்தானம்

"இந்திய ஜனாதிபதியின் ஸ்தானமானது பிரிட்டிஷ் அரசியல் அமைப்பில், மன்னருக்கு இருக்கும் ஸ்தானத்தைப் போன்றது. ஜனாதிபதி அரசாங்க அதிபரே தவிர, நிர்வாகத் தலைவர் அல்லர். அவர் தேசத்தின் பிரதிநிதியே தவிர தேசத்தை ஆள்பவர் அல்லர். தேசிய முடிவுகளுக்கு அங்கீகார முத்திரையளித்து அறிவிக்கும் சாதனமே அவர். நிர்வாகத்தில் அவருடைய ஸ்தானம் இதுதான்."

### விசேஷ உரிமைகள்

தம்முடைய அதிகாரங்கள், கடமைகளின்படி ராஷ்டிரபதி செய்யும் காரியங்களுக்காக அவரை எந்தக் கோர்ட்டும் விசாரிக்க முடியாது. 'இம்பீச்மென்ட்' என்ற விசேட குற்றச்சாட்டுக்கு மாத்திரமே அவர் பதில் சொல்ல வேண்டியிருக்கும். பதவிக்காலத்தில் அவர் மீது கிரிமினல் வழக்கு எதுவும் தொடர முடியாது. அவரைக் கைதுசெய்யவோ சிறையிடவோ கூடாது. அவர் மீது சிவில் வழக்குத் தொடுப்பதானால் அவ்வழக்கில் கோரப்படும் நிவாரணம் சம்பந்தமாக இரண்டு மாதங்களுக்கு முன்பு எழுத்து பூர்வமான நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

### குற்றவிசாரணை

அரசியல் சட்டத்தை ஜனாதிபதி மீறிநடந்தால் அவரைக் குற்றவிசாரணை செய்வதற்கு

[4-ம் பக்கம் பார்க்க]

## மக்கள் கருத்து

### முத்திரைத் திட்டமும் ஊழியர் கஷ்டமும்

மூன்றாவது வளர்முக நாடுகளில் உற்பத்தித்துறையில் வளர்ச்சிபெற்றுவரும் நாடுகளில் இலங்கையும் முன்னணி வகிக்கின்றது என்பது உண்மை. அதற்கு வேண்டிய ஒத்தாசைகளையும் உதவியையும் ஏனைய வளர்ச்சிபெற்ற நாடுகள் அளித்து வருகின்றனவென்பதும் உண்மை. ஆகவே அரச ஊழியரும் ஏனையோரும் அரசிற்கு வேண்டிய ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும். ஆனால் அந்த வேளையில் புரட்டாதி மாதம் தொடக்கம் அரசாங்கம் மாதம் 300 ரூபாவுக்கு மேல் வருமானம்பெற்றும் ஊழியர் தவிர்ந்த ஏனையோருக்கு வழங்கும் உணவு முத்திரைத்திட்டத்தில் அரசஊழியர் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

முதலில் நாலு பிள்ளைகள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு அவருடைய வருமானம் 300 ரூபாவிற்கு குறைவாக இருப்பதால் 139-50 சதத்திற்கான இலவச முத்திரை வழங்கப்படுகிறது. அவர் ஏனைய உணவுப் பொருள்களைத் தவிர்ந்த பிரதானமாக, பிள்ளைகளுக்குத் தேவையான பால்மா வகைகளை பெற்றுக் கொள்வதற்கு எவ்விதத்திலும் கஷ்டப்படத் தேவையில்லை. அவருடைய சராசரி மாத வருமானம் 250 ரூபாவென வைத்துக்கொண்டால் [எல்லாம் கழிவொன்றுமிராத அசல் வருமானம்] அவருடைய நாளாந்த செலவு $250 \times 139\text{-}50 = 389\text{-}50 \div 30 = 12.98$ தாராளமாக நடத்தி மிச்சமும் பிடிக்கலாம்.

நாலு பிள்ளைகளைக்கொண்ட எனது குடும்பத்தையும் நாளாந்தம் ஏற்படும் செலவுகளையும் ஒத்துப்பார்ப்போம். நான் ஓர் உள்ளூராட்சிமன்ற ஊழியன். மாத வேதனம் 514 ரூபா இதில் வங்கிக் கடன், கூட்டுறவு கிக்கனச் சங்கக்கடன் ஏனைய கழிவுகள் எல்லாம்போக நான் பெறும் மாத வேதனம் கிட்டத்தட்ட 225 ரூபா. ஆகவே என்னுடைய நாளாந்தச் செலவு $225\text{-}00 \div 30 = 7\ 50$ சதம். உணவுமுத்திரைத் திட்டத்தில் உள்ளவர்க்கும் எனக்கும் உள்ள வருமான நாளாந்த விகிதம். 12 98 : 7 50 நாளாந்தம் இதனால் எனக்கு ஏற்படும் பற்றுக்குறை = 5 48 சதம் உணவு முத்திரைத் திட்டத்தில் 139-50 சதத்திற்கு நாளாந்த சலுகையான 4 65 இல்லாவிடினும் அரச ஊழியர் தவிர்ந்த அடுத்தவரின் நாளாந்தச் செலவு 8 33 சதம். இந்த வகையில் பார்த்தாலும் அரசஊழியனாகிய நான் நாளாந்தம் 83 சத பற்றுக்குறையால் பாதிக்கப்படுகின்றேன். அதாவது கிட்டத்தட்ட 36 சத விகிதத்தால் பாதிக்கப்படுகிறேன். ஆகவே மேற்சொன்ன விகித சம்பள உயர்வு அரசாங்கம் தர முடியாவிட்டாலும் $83/514 \times 100 =$ கிட்டத்தட்ட 16 சதவிகிதமாவது கிடைத்தால் ஓரளவு நிவாரணம் பெறலாமென்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

எஸ். வேலன்சின்னத்தம்பி
யாழ்ப்பாணம்.

## செல்வச் சந்நிதி முருகா!

அற்புதம் பலகோடி அருந்தமிழ் மறைபாடும்
அருள் ஞான சம்பந்தரும்
ஆலாலசுந்தரரும் பாடு திருப்பாடலொடு
அருணகிரி திருப்புகழ் பெறும்
அணியா நிலைகையின் வடபாலமைந்துள்ள
ஆனந்த சந்நிதி தனில்
அனுதினமும் அருள் காட்டி அனுபூதி நெறிநாட்டி
அடியர் துயர் நீக்கிவருள்வாய்
ஆலமர் கடவுளின் சிவமார் நுதற்கண்ணில்
அனலாய் யுதித்த குமரா
அன்னையுமை கண்குளிர அன்று சரவணமதில்
அணிநடை பயின்ற அழகா
ஆதியந்த மற்ற சோதிவேல் தாங்கிடும்
அமரர் சேனாதிபதியே
அழகுநிறை செல்வச் சந்நிதி தனிலமர்ந்துநீ
அருள் புரிந்தருள வாயே!

காரவுண வாரியும் கிரவுஞ்சமும் அழியக்
கதிர்வேல் விடுத்த குகனே
கற்கிமுகிதனைக் கண்டு அஞ்சு நக்கீரனைக்
காக்கவேல் விடுத்த குமரா
கலியுகந்தன்னிலே கண்கண்ட தெய்வமே
கற்பூரப் பேரொளியிலே
காவடி யெடுத்தடியார் ஆடிடும் காட்சியை
கண்டுருகு கோடியன்பர்
கசிந்துருகிக் கண்ணீர் பொழிந்து தொழுகாட்சி
நிறை
கவினுரும் சந்நிதிதனில்
கார்மேக வண்ணனின் மருகனே முருகனே
கன்னல் மொழி வள்ளியோடும்
கணபதியும் பரங்கிரிக் கோயில் கொண்ட மரவே
கருணை வேல் மூலமாகும்
கண்டன்பர் தொழுதிட என்றும் சந்நிதியுறை
கந்தவேள் அருளுவாயே

--புலவர் சச்சிதானந்தசிவம்

## சந்நிதியின் தேர் அழகு

கடலருகே ஆற்றருகே கண்காட்டும் குளத்தருகே
படர்மணலில் மரநிழலில் பகதர் குழாம் புகழ்பாட
இடர்களையும் சந்நிதிவேல் இவர்ந்துவரும் தேரழகு
படக்கண்ணீர்வார வினைதீர இருள்போக்கும் ஆனந்த
வேல்

--மூ. சு. கதிர்காமத்தம்பி

## தேர்மீதேறி முருகா வருக!

அண்டங்கள் ஈரேழும் மலர்கள் தூவ
அயலயலே அஞ்சுகங்கள் அணைந்தே நீவிர்
கொண்ட பெருந்தன்மையொடு கொன்னையின்பம்
கொடுப்பதற்கும் கோலத்தேரேறி யின்று
தண்டலைக்கும் தண்ணவிசேர் தயைக்குமாக
தனிப்பெருமை கொண்டபெரும் வேலொன்றேற்றி
தொண்டர்கள் தம்முன்னிலையில் தோன்றுங்காட்சி
தொல்பெருமை வாய்ந்த தென்றும் வரு• வாழ்•!

--எழினி சீ. சிவநாதபிள்ளை

## சர்வவினையகற்றும் சந்நிதி முருகன்

ஈழத்திருநாட்டில் இலங்கும் தலங்களிலே தனிப்பெருந் தன்மையொடு விளங்குவன அழகன் முருகன் குடிகொண்டுள்ள ஆலயங்களாகும். இவற்றுள் தென்பால் கர்மவினை விலக்கும் கதிர்காமக் கடவுளாகவும் வடபால் தொல்லை வினை தொலைக்கும் நல்லைநகர் நாதனாகவும், பாவவினை நீக்கும் மாவை முருகனாகவும், சர்வவினையகற்றும் சந்நிதியின் சரவணனாகவும், சண்முகக் கடவுள் உறை சின்னூரி என்னின் மிகையாகாது.

இத் திவ்ய தலங்களின் பூஜோபசார நிகழ்ச்சிகளை உன்னிப்பாகக் கவனிப்போர்க்கு மாவிட்டபுரம், நல்லூர் முதலியவற்றில் மந்திரமூலம் ஆகம நியமப்படியும், கதிர்காமத்திலும், செல்வச்சந்நிதியிலும் பழமை பேணப்பட்டு வாய்கட்டி வழிபாடாற்றப்பட்டு வருவதும் கண்கூடு.

தெற்கே கதிர்காமத்தில் காட்சி கொடுக்கும் கந்தக் கடவுள் அங்கு கொடியிறக்க

சபா. நாகராஜன்

மாக வடக்கே வடிவேலன் வரும் வேளையில் சந்நிதியில் கொடியேற்றப்படுவதாக ஐதீகமுண்டு. இவை யாவும் இத் தலவரலாறு காட்டும் உண்மைகளாக உரைக்கப்படு

[4ம் பக்கம் பார்க்க]

# இந்திரா - சஞ்சய் தேர்தலில் போட்டி?

## பாராளுமன்றக் குழுவே முடிவு செய்ய வேண்டும் என்கிறுர் திருமதி காந்தி

புதுடில்லி, செப். 4

இந்திய இடைக்காலத் தேர்தலில் தாமும் தமது புதல்வர் திரு சஞ்சய்காந்தியும் போட்டியிடுவது குறித்து இந்திரா காங்கிரஸ் பாராளுமன்றக்குழுவே முடிவு செய்யவேண்டும் என்று முன்னுள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நிருபர்களிடம் தெரிவித்தார்.

திரு சஞ்சய்காந்திக்கு தேர்தலில் போட்டியிடுவதற்குரிய வயது வந்து விட்டது. அவர் போட்டியிடுவதில் எதுவித தவறும் இல்லையே என்றும் அவர் நாக்பூரில் நிருபர்களிடம் கூறினுர்.

இதேவேளையில் திருமதி காந்தியும் அவரது புதல்வர் சஞ்சய் காந்தியும் நேற்று ஆச்சாரியா வினோபாபாவேயை இரண்டுதடவைகள் சந்தித்தனர் என்றும் விறிவிக்கப்பட்டது. (இ)

---

மத்திய அரசு மீதான

# சோவின்மனு

## அரசுக்கு 3 நாள் அவகாசம்

சென்னை, செப். 4

இந்தியப் பிரதமர் திரு. சரண்சிங் பிரதமராக என்ன அதிகாரம் இருக்கிறது என பத்திரிகையாளரும் சினிமா நடிகருமான 'சோ' இராமசாமி சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல்செய்திருந்த ரிட்மனுவுக்கு எதிர் மனுவைத் தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு மேலும் 3 நாள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் சோவின் மனுவை ஏற்றுக்கொண்ட நீதியரசர் திரு. ராமசாமி, இம்மனுவில் முக்கிய அரசியல் சாஸனப் பிரச்னைகள் சம்பந்தப்பட்டிருப்பதால் பரிசீலனைக்கு இது சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று கூறியிருந்தார். (இ)

---

## அமெரிக்க சீனப் பார்வையாளர் வெளிநடப்பு

ஹவானு, செப். 4

அணிசேரா மாநாட்டில் கியூபாத் தலைவர் டாக்டர் பிடல் காஸ்ட்ரோ தலைமை உரை நிகழ்த்திக்கொண்டிருக்கையில் அமெரிக்க சீனத் தூதுவர்கள் மாநாட்டை விட்டு வெளிநடப்புச் செய்தனர்.

டாக்டர் காஸ்ட்ரோ சீனுவையும் அமெரிக்காவையும் கண்டித்துப் பேசியபோதே பார்வையாளர்களாகக் கலந்துகொண்ட அமெரிக்க, சீனப் பிரதிநிதிகள் வெளிநடப்புச்செய்தனர்

அணிசேரா இயக்கத்தை சீனுவும் அமெரிக்காவும் சீர்குலைக்க முயலுகின்றன என அவர் கூறியதை அடுத்தே இவர்கள் வெளியேறினர்.

மாநாட்டு மேடையில் தலைவர்டாக்டர் காஸ்ட்ரோ புரட்சிகர இராணுவ உடையில் நடுவேகாணப்பட்டார். அவருக்கு ஒரு புறத்தில் முன்னுள் தலைவரும் இலங்கை ஜனுதிபதியுமான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் மறுபுறத்தில் ஐ. நா. பொதுச்செயலாளர் டாக்டர் குர்த்வால்ட்ஹெய்மும் அமர்ந்திருந்தனர்.

மாநாடு ஆரம்பமாவதற்குமுன்னர் காலஞ்சென்ற அல்ஜீரிய அதிபர் திரு பொமிதியனின் மறைவுக்கு மௌனஞ்சலிசெலுத்தப்பட்டது. (இ)

---

சுவாமி விவேகானந்தர் விழா

## பாடசாலைகளிடையே கலை நிகழ்ச்சிகள்

[புலோலி]

உலக இந்து மாசபையின் இலங்கை கிளை, அடுத்த வருடம் ஜனவரி மாதம் 12ந் திகதி சுவாமி விவேகானந்தர் விழாவைக் கொண்டாடுவதை முன்னிட்டு அடுத்த மாதம் யாழ் மாவட்டப் பாடசாலைகளிடையே போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் என்பவற்றை நடத்தவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள், வடமாநிலக் கல்வியதிபதியுடன் தொடர்புகொள்ள வேண்டுமென்று உலக இந்து மாசபையின் இலங்கைக் கிளைத் தலைவரும், யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி அறிவித்துள்ளார். (ஆ)

---

## முன்னைவிட அதிக பக்தர்கள்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய தேர் உற்சவத்தில் இம்முறை முன்னரைவிட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்

துர்க்காதேவி எழுந்தருளிய தேரின் வடத்தை ஒருபுறம் ஆண்களும் மறுபுறம் பெண்களுமாக இழுத்தனர். (கு)

---

## ஆலயத்திற்கு மின் இணைப்பு

[சித்தன்கேணி]

கலைநகர் வட்டபிட்டுவோ ஆதி வைரவர் ஆலயத்திற்கு புதிதாக மின்னிணைப்புசெய்யப்பட்டிருக்கின்றது. இம்மின்னிணைப்பிற்கான செலவை சமூகசேவையாளரான கலைநகரைச் சேர்ந்த திரு மூ. சின்னத்துரை பொறுப்பேற்றுள்ளார். (க)

---

## அபராதம் செலுத்தாததால் மீண்டும் றிமாண்ட்

(பண்டத்தரிப்பு)

கடந்த 1975ம் ஆண்டில் நடைபெற்ற காங்கேசன்துறைத் தொகுதி இடைத் தேர்தலின்போது வாக்களிப்பில் ஆள்மாறாட்டம் செய்ததாகச் சுன்னுகம் பொலிஸாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு, 750 ரூபா அபராதம் விதிக்கப்பட்ட அளவெட்டியைச் சேர்ந்த சித்தபத்து என்பவர் அப்பணத்தை உரிய காலத்தில் நீதிமன்றத்தில் செலுத்தத் தவறியமையால் மல்லாகம் நீதிமன்றத்தால் பகிரங்க வாரண்டு பிறப்பிக்கப்பட்டது. இவருக்கு பிணையாக நின்ற அளவெட்டியைச் சேர்ந்த சோமபாலா என்பவருக்கும் இவருடன் சேர்த்து வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

இதையடுத்துச் சுன்னுகம் பொலிஸார் மூலம் இவர்கள் இருவரும் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது சித்தபத்து என்பவரை இம்மாதம் 4ந் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி பிணையாளியான சோமபாலாவின் பிணையைரத்துச்செய்து அவரைவிடுதலைசெய்தார். [க]

---

### இந்திய...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் சட்டம் இடமளிக்கின்றது. குற்றப் பத்திரத்தை பாராளுமன்றத்தின் எந்தச் சபையிலும் [லோகசபை அல்லது ராஜ்யசபை] கொண்டு வரலாம் இது ஒரு தீர்மான ரூபத்தில் சபையின் மொத்த உறுப்பினர்களின் மூன்றில் இருபங்கு அங்கத்தவரின் ஆதரவுடன் நிறைவேற்றப்படவேண்டும். இத்தகைய பிரேரணை கொண்டுவருவதற்கு 14 நாட்களுக்கு முன்பேசபையின் மொத்த உறுப்பினர்களில் காற்பங்குக்குக்குறையாத அங்கத்தவர்கள் கையெழுத்திட்டு நோட்டீஸ் கொடுக்க வேண்டும்.

ஒருசபையினுல் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டால் அதை மற்றச் சபை விசாரிக்க வேண்டும் இவ்வாறுவிசாரிக்கும் சபையினுல் அச்சபையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு ஆதரவுடன் குற்றச் சாட்டுக்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் ஜனுதிபதி பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

இன்றைய நிலையில் லோகசபை கலைக்கப்பட்டுவிட்டது. ராஜ்சபையில் குற்றப்பத்திரிகை தாக்கலாவதற்கு ஜனதாவுக்கு சட்டதிட்டப்படி ஆதரவு கிடைக்கமாட்டாது தேர்தலின் பின்னும் ஜனுதிபதியை நீக்கும் தீர்மானத்துக்கு மூன்றில் இரண்டு ஆதரவுகிடைக்குமா என்பதும் கேள்விக்குறியேயாகும்.

---

## இன்றைய பலன்

ஆவணிமாதம் 20ம் திகதி

புதன்கிழமை [5-9-1979]

மேடம்: புதிய துறைகளில் ஈடுபடுபவர்கள் புதிய முதலீடுகளுக்கும் சிறப்பான தினம் சிலருக்கு புதுமனை கட்டும் ஆர்வம் பிறக்கலாம் நல்ல தினம்.

இடபம்: வாகன சுகத்துடன் வாழ்க்கை நலன் வந்து சேரும் தாய்வழித் தனத்துடன் தன்மானம் தலைதூக்கும்.

மிதுனம்: பின்னைப்பாசம் உள்ளத்தில் தலைதூக்கும் சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றிகரமாக முடியுங்குடும்பத்திலும் பிணைப்புகள் இறுகும் மகிழ்ச்சிகரமான தினம்

கடகம்: இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று இலாபகரமான தினம் வாகனச் சொந்தக்காரர்கள் அதிக பயனடைவர் ஆசிரியத் தொழிலில் இருப்போர்க்கும் செல்வாக்கு வளர்வதற்கு இடம் உண்டு.

சிங்கம்: அன்பின் பிணைப்பு உங்களைப் பரவசத்தில் ஆழ்த்தும் சாஸ்திரவழியால் கனிவான சம்பவங்கள் இடம் பெறும். வெளியிடத் தொடர்புகளிலும் நன்மையான மாற்றம் உண்டு.

கன்னி: பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும் சிலருக்கு உடல்நலமும் சிறிது பாதிக்கப்படலாம் நம்பிக்கை வைப்பதன்மூலம் பணம் பறிபோகலாம் புதிய தொழில்களை இன்று பின்போடவும்.

துலாம்: இன்று சுவைதரும் நிகழ்ச்சிகள் இடம் பெறும் வெளியிடத்திலிருந்து வியப்பூட்டும் செய்தியொன்று கிடைக்கலாம் இல்லத்தில் இனிமை தவழும் இன்று சுப யோக நாள்.

விருட்சம்: அறவழியை நாடுவீர்கள் தெய்வசிந்தை மேலோங்கி நிற்கும் குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும் புண்ணிய யாத்திரை ஒன்றை மேற்கொள்ள முற்படுவீர்கள்.

தனு: புதிய கோணத்திலிருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு துணிவையே துணையாகக் கொண்டு காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள் பொதுசனத் தலைமையுடன் புகழும் தேடிவரும்.

மகரம்: மேலிடத்திலிருந்து நேசக்கரம் நீட்டப்படும் எதிரிகள்கூட உங்களிடத்தில் அன்பு காட்டுவார்கள் குடும்பத்தில் அமைதி நிலவும் சிலர் வாழ்க்கையில் காதல் பிரச்னைகளுக்கு இடமுண்டு நல்ல நாள்.

கும்பம்: நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம் கடமையாற்றுமிடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும் சமயோசித புத்தியினுல் எதையும் சமாளிக்கலாம்.

மீனம்: கடந்துபோன சம்பவம் ஒன்று குறித்துக் கவலைகள் அதிகமாகும் பலவழிகளிலும் பணம் செலவாகுதற்கு இடமுண்டு சிறிய தவறுக்குக்கூட பெரிய தண்டனை கிடைக்கலாம் கவனித்திடல் வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

---

### சர்வ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன அவைகீசெற நிகழ்வுகளாக வேக்கிழமை பகலும் பின்னர் வேல் வந்திறங்கும் வழிபாட்டு வைபவங்களும் செல்வச் சந்நிதியில் செய்துவரப்படுதல் நோக்கற்பாலது

கொடியேற்றத்தின் பின்னர் பத்தாம் திருவிழாவிலிருந்து பக்தகோடிகளின் பக்திப்பிரவாகம் தொண்டமானுற்றினை விஞ்சி வழிவதை அங்கு காணலாம் பல திசைகளிலுள்ள கிராமப் பாதைகள் தெருக்கள் ஊடாக காவடிகள் பல வகையினவாக பல்வேறு பரவசத்தினரான பக்தகோடிகளால் பாற்காவடிகளாக, பன்னீர்க் காவடிகளாக, தூக்குக் காவடிகளாக, தலைக் காவடிகளாக, தேர்க்காவடிகளாக பிரதிஷ்டைக்காவடிகளாக ஆட்டக்காவடிகளாக, பாட்டுக் காவடிகளாக, ஆடி ஓடிவருகின்ற கண்கொள்ளாக் காட்சி. எண்ணிட்டாக் கின்றபொழுது சர்வவல்லமை வாய்ந்த எம்பிரானின் ஆற்றலை ஏற்றிப் போற்றுதற்கு இயலாது.

சந்தனக் கந்தக் கடம்பனை காார்மயில் வாகனனை, வள்ளிகாந்தனை, உமைமைந்தனை சந்நிதிச் சண்முகனை வந்தித்து வணங்கிட மக்களையகன்றும், தொல்லைகள் தொலைந்திடும், அல்லல்கள் அகன்றிடும் வேல்நாயகனாக விளங்கிடும் வேலவன் மூலஸ்தானத்தில் உறைகின்ற உன்னதக் காட்சியை உரைத்திட முடியுமா அவன் கழல் தொழும் அடியார், அழும் அடியவர்கள், அழும் விரைவுள்ள மெய்யடியார் சூழும் சந்நிதியைச் சாரும் பரிபக்குவ நிலையையடைவோர் முன்னை வினைப் பயனை வென்றவரே யாவார்.

மயிலேறும் மாலுருகன் இன்றுஇரதமேறி கரங்கூப்பித் தொழும் அடியவர்க்கு வரமீயும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். நாளைய தினம் இறைவன் வேண்டுவார் வேண்டுவதை வழங்கும் வெற்றிவடிவேலன் கோலமா மஞ்ஞை மீதிவர்ந்து தீர்த்தமாடிப் பாவங்களை போக்கியருள்வான். பார்புரக்கும் பாலமுருகன் கோலமாமயில் மேனி தேவியர்புடை சூழ கூர்வேலோடு, குஞ்சரி மணாளனை வீற்றிருக்க அவர் தம் மென்மலர் பாதபங்கயம் கண்டு போற்றுதல் செய்குவம்.

---

## சங்கச் செய்திகள்

[வவுனியா]

வவுனியா, புதுக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சங்கம் காப்பாளர்கள்: தா. சிவசிதம்பரம் எம் பி. கெ. பத்மநாதன், பொ. வன்னியசிங்கம், வே. க. நாகராசா, தலைவர்: க. சற்குணசிங்கம் [அதிபர்], உபதலைவர்: வ. அ வீரக்கோன், வே. மாரிமுத்து, செயலாளர்: பொ மாரிமுத்து, உபசெயலாளர்: ச. தனபாலசிங்கம், பொருளாளர்: ந. குமாரசிங்கம். 17 பேர் உறுப்பினர்களாகத் தெரிவாகினர். [கு]

0 0 0

[கன்னுகம்]

கன்னுகம் ப நோ கூட்டுறவுச் சங்கத்தின் 16ம் கிளையின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: திரு சி க பரம், உபதலைவர்: திரு நா யோகராசா செயலாளர்: திரு க கந்தசாமி நிர்வாகசபை உறுப்பினர்களாக திருவாளர்கள் காசிபர் விக்னேஸ்வரன், த சிவசுப்பிரமணியம், க நாகரத்தினம் க குகதாசன், சி செல்வராசா, இ இராசரத்தினம்.

∴ ∴

[சங்கானை]

தொட்டிலடி சங்கானை ஐக்கிய நாணய சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்கள்: தலைவர்: வ. பாலசுப்பிரமணியம், செயலாளர்: வி. பாலரத்தினம், உப செயலாளர்: மூ. தேவராசா, பொருளாளர் க இராமலிங்கம், ஏழு பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். [கு]

## சங்கானையில் மீண்டும்

# மக்கள் வங்கி!

## வட்டு. எம். பி. தகவல்

(சித்தன்கேணி)

சங்கானையில் மக்கள் வங்கி மீண்டும் விரைவில் பழைய இடத்தில் திறக்கப்படவிருக்கிறது.

இத்தகவலை வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. திருநாவுக்கரசு தெரிவித்தார்.

சங்கானை மக்கள் வங்கி கடந்த பல மாதங்களாகச் சுன்னாகத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

பொதுமக்களும் விவசாயிகளும் பல சிரமங்களுக்கு மத்தியில் தமது வங்கித் தேவைகளைப் பூர்த்திசெய்து வந்தனர்.

வட்டுக்கோட்டைத்தொகுதியிலிருந்த ஒரேயொரு மக்கள் வங்கியான இந்த வங்கி, சங்கானைப் பொலிஸ்நிலையத்திலிருந்து சுமார் 200 யார் தூரத்திலுள்ள கட்டிடத்தில் அமைந்திருந்தது.

இவ்வங்கியின் கிளை சங்கானையில் தொடர்ந்து இயங்கவேண்டியதன் அவசியத்தை வட்டுக்கோட்டை எம். பி. திருநாவுக்கரசு மேலிடத்திற்கு எடுத்துக் கூறியதையடுத்தே பழைய இடத்தில் இவ்வங்கியை மீண்டும் விரைவில் ஆரம்பிப்பதற்கான வேலைகளை அரசு மேற்கொண்டுவருகிறது. [இ]


சாந்தி —யாழ்நகர்—போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வைஜந்திமாலா... சுனில்டட்...
"அமரபாலி"
ஹிந்தி - ஈஸ்ட்மன் வண்ணச்சித்திரம்
இசை சங்கர் ஜெய்கிஷன்
பின்னணி: லதாமங்கேஷ்கார்

REGAL (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30p. m; only
Special Shows Saturday & Sunday 10-30, a. m.
MICHAEL YORK in
M. G. M Presents
"LOGAN'S RUN"
Color-Thriller

வெலிங்டன் (யாழ்நகர்) தினசரி 2-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு 10-30
றிவோல்வர் ரீட்டா

விடோ (யாழ்நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

ராஜா யாழ் நகர் தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சாவித்திரி
காத்தவராயன்

மனோகரா (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி - சௌகார்ஜானகி
பார் மகளே பார்

From 6-9-79
RIO (Jaffna- TownHall)
Phone: 7697
BALOON VENDOR
Family Entertainment
Color - Scope

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
யாழ்ப்பாணம் காலை 10-30, பி.ப.2-30,
(சென்றலிந்த டவுனி) மாலை 6-30, இரவு 9-30
(கோமானிகள் புதம்)
எஸ். வி. சுப்பையா, ஜெயா, மீரா, ராம்தாஸ்
உதயகுமார்
நடித்த
மாமியார் வீடு
கதை-வசனம்-டைரக்ஷன்: கே. வெங்கட்


## போயா தினத்தை யொட்டி இன்றுசினிமாகாட்சிகளில்லை

காங்கேசன்துறையில் சம்பவம்:

# காதல் திருமணத்தின் எதிரொலியாக ஒருவர் பலி

## இரு பெண்கள் கைது!

(மாவிட்டபுரம்)

காதல் திருமண மொன்றின் எதிரொலியாக நபர் ஒருவர் பாளைக்கத்தியால் பலதடவைகள் உடலெங்கும் வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஒன்று காங்கேசன்துறையில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாகச் சந்தேகத்தின்பேரில் இரு பெண்கள் கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டதுடன் மற்றொரு நபர் ஒருவர் தேடப்பட்டு வருகிறார்.

காங்கேசன்துறையைச் சேர்ந்த கந்தன் குருநாதபிள்ளை என்பவரே கொலையுண்டவராவார்.

காங்கேசன்துறை மாம்பிராயைச் சேர்ந்த ஒரு வாலிபர் ஒருவரும் யுவதி ஒருவரும் காதலித்து அண்மையில் ஏனையோரின் விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்துகொண்டதையடுத்து ஏற்பட்ட இதுதகராறின் பின்னர் இக்கொலை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

தேடப்படும் சந்தேகநபரான கந்தன் சண்முகம் என்பவரின் மனைவி மகேஸ்வரி, மகள் புஷ்பராணி ஆகியோர் சந்தேகத்தின்பேரில் காங்கேசன்துறைப்பொலிசாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இம்மாதம் 10ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டனர். [ச]

## "மனைவியும் மகளும் கட்டிப்பிடிக்க கணவன் கத்தியால் வெட்டினார்"

### மரணவிசாரணையில் சாட்சியம்

(மாவிட்டபுரம்)

கொலையுண்டவரை சந்தேக நபர் கந்தன் சண்முகம் என்பவரின் மனைவியும், மகளும் கட்டிப்பிடிக்க சந்தேகநபரான கந்தன் சண்முகம் பாளைக்கத்தியால் பலதடவைகள் வெட்டினார். இரத்தம் பீறிட்ட நிலையில் கொலையுண்டவர் நிலத்தில் வீழ்ந்தார்.

இவ்வாறு காங்கேசன்துறை கொலைச் சம்பவம் குறித்து நடத்தப்பட்ட மரண விசாரணையில் சாட்சியமளித்த காங்கேசன்துறை மாம்பிராயைச் சேர்ந்த கனகு சிவசுப்பிரமணியம் என்பவர் கூறினார்.

காங்கேசன்துறையைச் சேர்ந்த கந்தன் குருநாதபிள்ளை என்னும் நபர் பாளைக்கத்தியால் பல தடவைகள் வெட்டப்பட்டு கொலைசெய்யப்பட்டதையடுத்து மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி இவ்விசாரணையை நடத்தினார்.

தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் நடந்த இவ்விசாரணையின் போது கனகு சிவசுப்பிரமணியம் மேலும் தனது சாட்சியத்தில் கூறியதாவது: கொலையுண்டவரின் மருமகள் முறையான இளம் பெண் ஒருவரும் சந்தேகநபரின் மகனும் அண்மையில் காதல் காரணமாக ஏனையோரின் விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்ததையடுத்து கொலையுண்டவரின் குடும்பத்திற்கும் சந்தேக நபரது குடும்பத்திற்குமிடையில் தகராறு ஏற்பட்டது. சம்பவதினம் கொலையுண்டவர் வீதியால் சென்று கொண்டிருந்த சமயம் சந்தேக நபரது மனைவியும், மகளும் அவரை ஏசினர். அவரும் பதிலுக்கு ஏசிக் கொண்டிருக்கையில் சந்தேக நபரின் மகள் புஷ்பராணி கத்தியொன்றை எடுத்துவந்து கொலையுண்டவரின் காலில் வெட்டவே சந்தேகநபர் தாமும் ஒரு கத்தியுடன் வந்தார். பின்னர் மனைவியும் மகளும் கொலையுண்டவரைக் கட்டிப்பிடிக்க சந்தேக நபரான கந்தன் சண்முகம் பாளைக்கத்தியால் பலமுறை வெட்டினார். இரத்தம் வெளியேற நிலத்தில் வீழ்ந்த கொலையுண்டவர் தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது அங்கு மரணமானார்.

கனகு சதிராசி என்பவரும் சாட்சியமளித்தார். விசாரணையின்பின் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [கு]

## சரக்குரயில் தடம்புரண்டது

(கொழும்பு)

கல்லோயாவுக்கு அண்மையில் சரக்குரயில் ஒன்று நேற்று தடம்புரண்டதை அடுத்து மட்டக்களப்பு, திருகோணமலை ரயில்சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.


வெல்லி
சைனிஸ்
தினசரி 4-45, 7-00, 9-30
PERCY

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்.
அஞ்சலிதேவி
சக்கரவர்த்தித்
திருமகள்


## "சுயநலமுள்ள மனிதன் என்றுமே முன்னேற முடியாது"

-- பிர. இரத்தினசபாபதி

(யாழ்ப்பாணம்)

"சுயநலத்தினுல் மனிதன் தன்புறுகின்றன். சுயநலத்தைத் தாண்டினுல்தான் அவன் இன்பம் அடையலாம். மனிதனுக்கு சுயநலம் இருக்கும் வரை மிருகத்துக்கும் அவனுக்கும் வித்தியாசம் இல்லை. மாணவர்களாகிய நீங்கள் மேன்மையடைய அரும்பாடுபடவேண்டும்."

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியில், பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரம செயலாளர் பிர. இரத்தினசபாபதி 'ஆத்மீக சன்மார்க்கநெறி' தொடரில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் செல்வி பத்மாவதி இராமநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பிர இரத்தினசபாபதி தொடர்ந்து உரையாற்றுகையில்;

### மோட்சமும் நரகமும்

"ஒரு பாதிரியார் தனது பிரசங்கத்தில் அடிக்கடி மோட்சத்தைப் பற்றிச் சொல்லுவார். ஆனல் அவர் மோட்சத்தைப் பார்த்தது கிடையாது. ஒருநாள் அவரை சில தூதுவர்கள் வந்து நரகத்துக்குக் கொண்டுசென்றார்கள். அங்கே மிகவும் அமர்க்களமாக இருந்தது. ஒரு வட்டமேசையைச் சுற்றி பலர் உட்கார்ந்துகொண்டிருந்தனர். அம் மேசையின் மேல் ஒரு பெரிய தட்டில் பாயாசம் வைக்கப்பட்டிருந்தது. ஆனல் ஒவ்வொருவருடைய கையிலும் ஒவ்வொன்று மூன்றடி நீளமான பெரிய கரண்டி இருந்தது. பாயாசத்தை எடுத்தாலும் வாய்க்குள் இட்டுக் கொண்டு போக முடியவில்லை. பாயாசத்தைப் பருகமுடியாமல் அங்குள்ளவர்களும் திண்டாடினர்கள். பாதிரியார் மோட்சத்தைப் பார்க்க விரும்பினர். உடனே அவர் அங்கு கொண்டுபோகப்பட்டார். அங்கும் இதே காட்சி. ஆனல் ஒவ்வொருவரும் ஒவ்வொருவர் பாயாசத்தை அள்ளி மாறி மாறி பருக்கிக்கொண்டிருந்தார்கள். இங்கு சுயநலம் இல்லை. ஆகையினல் அவர்கள், ஏதிபட்ட நெருக்கடியையும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதில் வெற்றிகொண்டார்கள்" என்றார். [ச]

## பதில் உபவேந்தர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக உப-வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மலேசியா சென்றுள்ளதால் அவர் நாடுதிரும்பும் வரை பல்கலைக்கழக டீன் பேராசிரியர் திரு. எஸ். இராஜரட்ணம் (ரோனி) பதில் உபவேந்தராகக் கடமையாற்றுவார். [செ]

## கிளிநொச்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்குகள் நடைபெற்றன. ஆவணி மாதச் சுவாதி நட்சத்திரத்தில் கொடியேற்றுஉற்சவம் ஆரம்பமாகி, ஆவணிப் பௌர்ணமி தினத்தன்று கிளிநொச்சி குளக்கரையில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

ஆலயம் இன்னும் பூரணமை பெறவில்லை. 'கோபுரதரிசனம் கோடி புண்ணியம்' என்பார்கள். இப் பகுதி மக்களுக்கு இன்னமும் கோபுர தரிசனம் கிடைக்கவில்லை. முருகன் திருவருள் துணையோடு இப் பகுதி மக்கள் மீண்டும் ஒருமைப்பட்டால் இராசகோபுரத்துடன் முருகன் ஆலயம் புதுமெருகுடன் காட்சிதரும் நாள் வெகுதூரத்திலில்லை.

ஆ. சி. முருகேசு.

### பாக். அணுசக்தி உற்பத்தி:

# ஹவானாவில் பாக். அதிபர் இந்திய மந்திரி சந்திப்பு

ஹவானா, செப்.4

அணுசக்தி துறையில் பாகிஸ்தான் முற்றிலும் அமைதியான நோக்கத்தையே கொண்டுள்ளதென்று பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஸியாவுல் ஹக் நேற்று ஹவானாவில் இந்திய வெளிநாட்டமைச்சர் திரு எஸ் என் மிஸ்ராவிடம் தெரிவித்தார்.

அணிசேரா மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஹவானா வந்திருந்த இரு தலைவர்களும் சுமார் 40 நிமிட நேரம் சந்தித்து பேச்சு நடத்தினர்.

பாகிஸ்தான் அணு ஆயுதங்களைத் தயாரிக்காது என்றும் இந்தியா அணு ஆயுதங்களை தயாரிக்கும் என்ற பேச்சுக்கே இடமில்லையாதென்று திரு. மிஸ்ரா ஜனாதிபதி ஹக்கிடம் தெரிவித்துள்ளாராம்.

இதேவேளையில், அணுசக்தி உற்பத்தி குறித்து ஜெனரல் ஹக்கின் விசேடகடிதம் ஒன்று இந்தியப்பிரதமர் திரு. சரண்சிங்குக்கு கிடைத்துள்ளது. இக்கடிதம் பரிசீலிக்கப்படுவதாக இந்திய அதிகாரி தெரிவித்தார். [இ]

### அணிசேரா இயக்கத்தின்

# சுதந்திரத்தைக் காப்பதில் கியூபா முன்னணி வகிக்கும்

## தலைவர் காஸ்ட்ரோ உறுதி

ஹவானா, செப். 4

அணிசேரா இயக்கத்தின் நெறியையும் சுதந்திரத்தையும் காப்பாற்றுவதில் கியூபா முன்னணியில் நிற்குமென்று கியூபாத்தலைவர் டாக்டர் பிடல் காஸ்ட்ரோ தெரிவித்தார்.

அணிசேரா உச்சிமகாநாட்டிற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே டாக்டர் காஸ்ட்ரோ இதனைத் தெரிவித்தார்.

இலங்கை ஜனாதிபதியும் இயக்கத்தின் முன்னாள் தலைவருமான திரு ஜே ஆர் ஜெயவர்த்தனாவிடம் இயக்கத்தின் தலைமைப்பொறுப்பை சம்பிரதாயபூர்வமாக ஏற்றுக்கொண்டபின்னர் டாக்டர் காஸ்ட்ரோ உரையாற்றினார்.

மகாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சிகள் சுமார் மூன்றரை மணிநேரம் நடைபெற்றது.

டாக்டர் காஸ்ட்ரோமேலும் கூறியதாவது:

தமது தலைமைக் காலத்தில் 3 ஆண்டுகளிலும் விவேகத்துடனும் இசைந்துகொடுக்கும் நோக்குடனும் நடந்துகொள்வேன் என உறுதிகூறுவேன்.

விவாதங்கள் நடைபெறுவதை நான் ஒருபோதும் தடைசெய்யமாட்டேன். தலைவர் என்ற முறையில் எவரையும் பேசாது தடுக்கவும் நான் விரும்பவில்லை. [இ]

# "வறுமையை ஒழிப்பதே இயக்கத்தின் நோக்கம்"

## அணிசேரா மாநாட்டில் ஜே.ஆர்.

ஹவானா, செப் 4

அணிசேரா இயக்கத்தின் நோக்கம் உலகிலிருந்து வறுமையை ஒழித்துக்கட்டுவதே ஆகும். இந்த நோக்கத்திற்கு இயக்கத்தின் சகல உறுப்பு நாடுகளும் முன்னின்று உழைக்கவேண்டும்.

இவ்வாறு இலங்கை ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தன ஹவானாவில் நடைபெறும் 6-வது அணிசேரா மகாநாட்டில் பேசுகையில்கூறினார்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:- தேவையற்ற பிளவுகளையும், பிணக்குகளையும் வளர்ப்பதில் நாம் நமது சக்தியை விரயமாக்குகின்றோம் நமது சகல சக்திகளையும் பயன்படுத்தி நமது மக்களுக்கு நல்வாழ்வு காணப்போகிறோமா? என்பது இன்று எம்முன்னுள்ள கேள்வியாகும் நமது ஒற்றுமையையும் வலிமையையும் பயன்படுத்தி நாம் நமது மக்களுக்கு நல்வாழ்வழிக்கத் தவறினால் வாய்ப்பைப் பயன்படுத்தத் தவறிய அரசியல் பரம்பரையினர் என நம்மை வரலாறு சுட்டிக்காட்டும் என்றார்.

## அரச அதிபருக்கு இன்று வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரச அதிபருமான திரு யோகேந்திரா துரைசுவாமிக்கு புங்குடுதீவு மக்கள் அளிக்கும் வரவேற்பு விழா இன்று மாலை புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் சட்டத்தரணி ப கதிரவேலு தலைமையில் நடைபெறுகிறது.

யாழ் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ் இராசரத்தினம், வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர், கலாநிதி வி இராமகிருஷ்ணன் என் ஆர் கனகநாயகம் உட்பட பலர் சிறப்புரை ஆற்றுவார்கள். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். [கு]

## யாழ். மாவட்......

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யாளர் சங்கப்பிரதிநிதி திரு வை கி கு பிரமானந்தா, கொன்சல்ரன்சி அன்ட் பிஸனஸ் அண்ட் டெவலப்மென்ட் கொம்பனியினதும், மேர்ச்சன்ட் பிஸனஸ் கொம்பனியினதும் தலைவரும், முன்னாள் இலங்கைவங்கி பிரதான நிர்வாகியும், இலங்கை அபிவிருத்தி நிதி கூட்டுஸ்தாபனத் தலைவரும், உலகவங்கி ஆலோசகருமான திரு செ லோகநாதனைச் சந்தித்துமுந்திரிகைச் செய்கையிலும், பழவிற்பனையிலும், பழரச பானங்களின் உற்பத்தியிலும் யாழ். மாவட்ட முந்திரிகைச் செய்கையாளர்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் பற்றி எடுத்துரைத்து இதற்கு ஆகவேண்டியவற்றை கொன்சல்ரன்சி அன்ட் பிஸனஸ் அன்ட் டெவலப்மெண்ட் கொம்பனியும், மேர்ச்சன்ட் பிஸனஸ் கொம்பனியும் பொறுப்பேற்று செய்து கொடுக்க வேண்டுமென்று எடுத்துரைத்தார்.

இது குறித்து திரு செ லோகநாதன் கருத்துத்தெரிவிக்கையில் முந்திரிகைச் செய்கை விற்பனை, வைன், பழரசபானங்கள் விநியோகம் ஆகியவற்றின் உற்பத்தி, கிரியாமுறை பற்றிபூரணமான ஆலோசனை செய்ய வேண்டுமென்றும், இதற்கு முந்திரிகை உற்பத்தியாளர்களோடு செயல்முறை நிபுணர்களையும் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்றும் தெளிவாக விளக்கினார்.

இதற்குத் தேவையான செயல்முறை நிபுணர்களையும் ஆலோசகர்களையும் தாமே ஒழுங்கு செய்வதாக ஏற்றுக்கொண்ட திரு. செ. லோகநாதன் இந் நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னோடியாக முந்திரிகைச் செய்கையாளர்களினதும், செயல்முறை நிபுணர்களினதும் இத்தொழிலில் ஈடுபாடுடைய ஏனையோரினதும் ஓர் கூட்டத்தை தமது கொம்பனிகளின் ஆதரவில் அண்மையில் கூட்டப்போவதாகத் தெரிவித்தார்.

## கடல்தொழிலாளர்களுக்கு 35 வீடுகள்

[கட்டுவில்]

சாவகச்சேரித் தொகுதியிலுள்ள கடற்தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டு முடிவுக்குள் முப்பத்தைந்து வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாவகச்சேரித் தொகுதியிலுள்ள கோவிலாக்கண்டியில் 10 வீடுகளும், தனங்கிளப்பில் 25 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன கோவிலாக்கண்டியில் ஏற்கனவே 10 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது

## மத்தியகிழக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிதி குறுக்கிட்டார். அப்போதும் டாக்டர் காஸ்ட்ரோ, தமது கூற்றுக்குப்பதிலளிக்கும் உரிமை எகிப்திய பிரதிநிதிக்கு உண்டென்று கூறி அவரைப் பேச அனுமதித்தார்

இஸ்ரேலிய குடியேற்றவாலத்திலிருந்து பாலஸ்தீனத்தை விடுவிக்கும் பொருட்டு எகிப்து ஜெரூஸலம் சென்றது என்று எகிப்திய பிரதிநிதி கூறினார்.

அப்போது குறுக்கிட்ட பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜஹூப் யாஸிர் அரபாத், சைனாய் பிரதேசத்தில் ஒரு காணித்துண்டைப்பெறுவதற்காக ஜெரூஸலத்தைவிற்ற ஒருவர் விடுதலைபற்றிப் பேசுவது தமக்கு ஆச்சரியமாக இருப்பதாகக் கூறினார்.

இதற்குப் பதிலளித்த எகிப்திய பிரதிநிதி இக்கால கட்டத்தில் பாலஸ்தீன மக்களின் விடுதலைக்காகப் போராடும் ஒரே ஒரு அரபு இனமக்கள் எகிப்தியர்களேயென்றும் பாலஸ்தீனமக்கள் தமது தந்தை நாட்டை மீண்டும் பெறுவதற்கு ஐக்கியநாடுகள் சபையிலோ வெளியிலோ நடத்தும் எந்த ஒரு மகாநாட்டிலும் எகிப்து கலந்து கொள்ளத் தயாரென்றும் கூறினார். [இ]

## 'சண்டியன் சின்னத்தம்பி'



[யாழ்ப்பாணம்]

யாழ் "லயன்ஸ் கழக 1979-80ம் ஆண்டு சமூக சேவைநிதிக்காக வரணியூரான் குழுவினர் அளிக்கும் "சண்டியன் சின்னத்தம்பி" என்னும் நாடகம் 8ம் திகதி சனிக்கிழமை மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நாடகத்தை யாழ் கலை வட்டத்தினர் தயாரித்தளிக்கவுள்ளனர். (கொ)

# "ஈழநாடு"

## இந்திய தேர்தல் போட்டி

இந்தியப் பாராளுமன்றத்துக்கான [லோகசபை] இடைத்தேர்தல் இவ்வருடம் டிசம்பர் மாத நடுப்பகுதியில் நடைபெறுவது வாசகர்கள் தெரிந்ததே. இந்திய அரசியலில் முதல் தடவையாக - ஒரு பெரும் சோதனையாக - அரசியல் கட்சிகளுக்கே ஒரு பலப்பரீட்சையாக நடைபெறும் இந்த இடைத்தேர்தலில் மக்கள் எந்தக்கட்சியைத் தேர்ந்தெடுத்து ஆட்சிபீடத்தில் அமர்த்தப்போகின்றார்கள் என்பது...... ஒரு பெரும் கேள்விக்குறியாக உள்ளது! இந்திய மக்களை மட்டுமின்றி இலங்கை மக்களையும் கவர்ந்திருக்கும் இத்தேர்தலை போட்டி உங்கள் ஏடான "ஈழநாடு" அளிக்கும் 'அரசியல் விருந்தே'— தேர்தல் போட்டி! போட்டி மட்டுமல்ல, வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு ரொக்கப்பரிசுகளும் காத்திருக்கின்றன. இதனுடன் பலருக்கு தரமான ஆறுதல் பரிசுகளும்உண்டு. இதற்கு நீங்கள் செய்யவேண்டியது என்ன?

நாளைமுதல் வெளியாகும் போட்டிக்கூப்பனிலுள்ள கேள்விகளைக் கவனமாகப் படித்து, கூப்பனை நிரப்பி, கத்தரித்து, ஒரு தபாலட்டையில் ஒட்டியோ அல்லது கடித உறைக்குள் வைத்தோ எமக்கு அனுப்பிவையுங்கள். சரியான விடை எழுதி அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவுபெறும் மூவருக்கு ரொக்கப்பணமும், மற்றும் ஆறுபேருக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும், இப்பரிசுகளை யாழ்ப்பாணத்தின் பிரபல வர்த்தக ஸ்தாபனங்கள் அளிக்கின்றன. வாசகர்களின் ஆர்வத்தைப்பொறுத்து பரிசுத்தொகையும், பரிசுகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

போட்டி நிபந்தனைகள் இதுதான்.

- ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விடையுடனும் "ஈழநாடு" பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு கூப்பன் இணைக்கப்பட்டிருக்கவேண்டும்.
- வயதுக் கட்டுப்பாடு கிடையாது. எல்லோரும் இப்போட்டியில் தாராளமாகக் கலந்துகொள்ளலாம்.
- "ஈழநாடு" பத்திரிகை ஊழியர்களும் அவர்களின் உடனடி குடும்பத்தவர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்,
- இப்போட்டி சம்பந்தமாக எவ்விதக் கடிதப்போக்குவரத்தும் வைத்துக்கொள்ளக்கூடாது, "ஈழநாடு" ஆசிரியர் தீர்ப்பே முடிவானது,

போட்டிக் கூப்பன் நாளைமுதல் தொடர்ந்து வெளிவரும். அதேநேரத்தில் உங்களுக்கு உதவியாக அவ்வப்போது இந்தியத் தேர்தல்பற்றிய கட்டுரைகளும் வெளிவரும் என்பதையும் மகிழ்ச்சியுடன் கூறிவைக்க விரும்புகின்றோம்,

போட்டி முடிவுதிகதியும் பரிசுகள் விபரமும் அடுத்த சில தினங்களில் அறிவிக்கப்படும்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டுமாதம் செப்டம்பர் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at th General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No. 49, Telegram Eelanadu; T.Phone 389.